RESEARCH ARTICLE

IOR PRESS

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# செவ்வியல் இலக்கியங்களில் மண்ணும் மழையும்

அ. ஜனார்த்தலி பேகம் [அ] *

[அ] தமிழாய்வுத்துறை, ஜமால் முகமது கல்லூரி, திருச்சி-620020, இந்தியா,

# Ecological Concepts of Soil and Rain in Classical Tamil Texts

**A. Janarthali Begam [a, *]**

[a] Department of Tamil, Jamal Mohamed College, Tiruchirappalli-620020, Tamil Nadu, India

*Corresponding Author:
jahaameera1985@gmail.com

**ABSTRACT**

Soil and rain are the two fundamental natural resources that sustain life on Earth and serve as the foundation of human civilization. Rainfall nourishes the land, while soil provides the medium in which plants grow and living organisms thrive. Together, these elements create and preserve ecological balance, making them indispensable to agriculture, biodiversity, and human survival. Recognizing this intimate relationship, Thiruvalluvar emphasizes that life on earth flourishes only through the blessings of rain, underscoring its essential role in sustaining all forms of life. From a scientific perspective, soil is formed through the gradual weathering of rocks under the influence of water, sunlight, air, and climatic conditions. Over extended periods, large rocks disintegrate into smaller fragments, which are further transformed into fine soil particles through natural physical and chemical processes. The formation of fertile soil is an extremely slow process, often taking hundreds of years. Moreover, soil is not an isolated substance but a complex mixture of organic matter, minerals, water, air, and diverse living organisms. As the outermost layer covering the Earth's surface, it is appropriately regarded as the "skin of the Earth." Classical Tamil literature demonstrates a profound understanding of the interdependence between soil, rain, and life. These texts portray rain as the source of prosperity and soil as the basis of agricultural productivity, economic stability, and environmental sustainability. They reveal the ecological consciousness of the ancient Tamils, who recognized the need to preserve natural resources for the welfare of society. This article examines the representation of soil and rain in Classical Tamil literature, analyzing their environmental, agricultural, and cultural significance. The study highlights how classical Tamil texts integrate literary expression with ecological wisdom, emphasizing the indispensable role of soil and rain in sustaining nature, civilization, and human life.

**Keywords:** Classical Tamil Literature, Fundamental Natural, Soil And Rain, Civilization

## முன்னுரை

மனிதனுடைய வாழ்வானது பஞ்சபூதங்களை உள்ளடக்கியதாகும். சங்ககால மக்கள் இயற்கையோடு இணைந்த வாழ்க்கை முறையை விரும்பி வாழ்ந்தவர்கள். அவர்கள் வாழும் இடம் அனைத்தும் வாளொடு முன் தோன்றிய மூத்த குடி தமிழ் குடி என்ற பெருமைக்கு உரியவர்களாக திகழ்ந்தவர்கள். அவர்களின் அடையாளமாக விளங்கியது மண்ணும் மழையும் இத்தகைய மண்ணையும் மழையையும் கொண்டு தங்களது வேளாண்மை தொழிலை மேற்கொண்டு வாழ்ந்து வந்தவர்கள். உலகில் உள்ள அனைத்து உயிர்களுக்கும் மூல தனமாக இருப்பது நீராகும். நீரை சேமித்து மழை

இல்லாத காலங்களில் அதனை பயன்படுத்தவும் பழகிக் கொண்டனர். அத்தகைய நீரினை பாதுகாக்கும் மண்ணையும் மழையையும் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## மண்ணும் அதன் அமைப்பும்

தொல்காப்பியர் நிலத்தின் வகைகளை கூறியிருப்பார். குறிஞ்சி,முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பதை நடுவண்திணை என்று உரைப்பார். ஒவ்வொரு நிலத்திற்கு ஏற்றார் போல் மண்ணின் அமைப்பு தோன்றும். குறிஞ்சி நிலத்தில் சரளை மண், முல்லை நிலத்தில் கரிசல் மண் , செம்மண்ணும் மருத நிலத்தில் வண்டல் மண்ணும் நெய்தல் நிலத்தில் மணலும் பாலை நிலத்தில் பாலை மண்ணும் இடம் பெற்றுள்ளன.

இயற்கையும் பண்பாட்டையும் முதன் முதலில் தெளிந்து உரைத்தவர் தொல்காப்பியர் இதனை,

"இயற்கை பொருளை இற்றென கிளத்தல் (தொல்.நூற்.19)

செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறல் (தொல்.நூற் .20)

மலை ஆறு போன்ற இயற்கை கூறுகள் ஒவ்வொன்றும் அவற்றின் தனித்த பண்புகளைக் கொண்டவை நீரின் உடைய இயல்பு, குளிர்ச்சி நிலத்தின் இயல்பு வளமை, சூரியனின் இயல்பு வெம்மை இவ்வாறு மனிதனால் உண்டாக்கப்படாத இயல்பான பண்புகள் இந்த இயற்கைக்கு உண்டு என்று உரைக்கிறார்.

## சரளை மண்

அயன மண்டலப் பிரதேச காலநிலையில் சரளை மண் உருவாகின்றது. இம்மண் அதிக வெப்பநிலை மற்றும் அதிக மழைப்பொழிவு கொண்ட பகுதிகளில் சுவர் உறிதலின் செயலாக்கத்தினால் உருவாகிறது. இந்த மண் காபி, தேயிலை போன்ற பயிர்கள் வளர்வதற்கு இடமாக அமைகிறது. இம்மண் மலை பாங்கான இடங்களில் மட்டுமே உருவாகின்றது என்பதனை,

"புன் புலத்து அகன்ற சிறுயிலை நெருஞ்சி" (குறுந்தொகை 202-2)

என்றும்

"புறவு சேர்ந்திருந்த புன்புலச்சீறூர் நெல் விளையாதே

வரும் திறனையும் உள்ளவை எல்லாம்" (புறநானூறு 328: 1-3)

இம்மண் உள்ள இடத்தை புண்புறம் இடைப்புலம் என்று சங்க இலக்கியங்களில் குறிப்பிடுகிறது. சரளை மண் பற்றிய குறிப்புகளை, குறுந்தொகை, புறநானூறு இவற்றின் வழி அறிந்து கொள்ள முடிகிறது.

## வண்டல் மண்

வண்டல் மண் என்பது மருதத் திணை வந்து அமைகிறது. வண்டல் மண் ஆற்றுச் சமவெளிகள், கடற்கரைச் சமவெளிகள், வெள்ளைச் சமவெளிகள் ஆகியவற்றால் வளமிக்க மண்ணாக அமைகிறது. இவற்றில் நெல், கரும்பு, வாழை போன்றவை வளர்கின்றன. வண்டல் மண் காணப்படும் இடங்களை மென்புலம், மென்பால், சேர் புலம் என்று அழைக்கின்றனர்.

"மென்புலத்து வயல் உழவர்" (புறநானூறு 395-1)

வளையவர் வண்டல் போல் வார்மணல் வரு கொள" (கலித்தொகை 29- 5)

இவை எல்லாம் வண்டல் மண் சார்ந்த செய்திகளாகும். தீ பாறைகள் சிதைவடைவதால் கரிசல் மண் உருவாகின்றன இம்மல் இயற்கையிலே ஈர ப்பதத்தை தக்க வைத்துக் கொள்ளும் திறன்

கொண்டது கரிசல் மண்ணில் பருத்தி பயிர் வளரும் சங்க இலக்கியங்களில் கரிசல் மண் நிலங்களை வன்புலம், வான் பால், கரம்பை, வன்நிலம் ஆகிய பெயர்களால் சுட்டுகின்றனர். கரிசல் மண் முல்லைத் திணைக்கு உரியனவாக இடம்பெறுகின்றன.

## செம்மண்

உருமாறிய பாறைகள் மற்றும் படிக பாறைகள் ஆகியவை சிதைவடைவதால் செம்மண் உருவாகின்றன. இம்மண்ணில் இரும்பு ஆக்சைடு அதிக அளவில் காணப்படுவதால் சிவப்பு மற்றும் பழுப்பு நிறங்களில் காணப்படுகின்றன. இம்மண் பொதுவாக வறண்ட பிரதேசங்களில் காணப்படுவதால் இம்மண்ணில் தினை போன்ற சிறு தானியங்கள் விளைய ஏற்றதாகும். இதனை அகநானூற்று பாடல்,

"சேதா எடுத்த செந்நிலக் குரூஉத் துகள்

அகல் இரு விசும்பின் ஊன்றித் தோன்றும்" (அகநானூறு 79 :7 -8)

கொங்கரின் தோள் பதமானது கைகள் வலிமையானது. கற்பாறையை உடைத்து பள்ளம் தோண்டுவர். உளியால் உடைக்கும் போது தீப்பொறி பறக்கும். பாறை துகளாகும். கல்லை உடைத்து செய்த வினை, உப்பு நீர் ஊறிய பள்ளத்தை உண்டாக்கும் அப்பள்ளமானது பசுமாட்டு மந்தை செல்லும் செந்நிறத்தில் உள்ள வன்மையான நிலம் வன்மையான நிலம் தூள் பறக்கும்படி செல்லும் அந்த செம்மண் துகள் வானத்தில் ஊன்றித் தோன்றும் என்று செம்மண் உருவானதை அகநானூற்றில் அறிந்து கொள்ள முடிகிறது.

## பாலை மண்

அயனமண்டல பாலைவனப் பிரதேசங்களில் பாலை மண் காணப்படுகின்றன. இது ஓவர் தன்மை மற்றும் நுண் துகள்களைக் கொண்டது வளம் குறைந்த இம்மண்ணில் பயிர்கள் விளைவித்தல் இயலாது.

"மெல்லம் புலம்பன் வந்தமாறே" (ஐங்குறுநூறு 120 -4)

"இவர் விலை உப்பின் கொள்ளை சாற்றி

அதன்படு பூழிய கேண்புலம் படரும்" (அகநானூறு 390:1-2)

உமணர் உவர் நீரில் விளைந்த உப்பினை வாங்குவதற்காக புழுதி படிந்த வழியில் சரி உள்ள கோள் வண்டியில் ஏற்றுக்கொண்டு செல்வர் என்பதனை உணர்த்துகிறது.

மேலும் பல வகையான மண் அமைப்புகளும் சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆற்று மண்ணாக ஊற்று மண்ணாக இருக்கும் மண் புழுதி மண்ணாகப் பறந்தாலும் தன் பரம் குன்றம் ஊற்று நீரை தரும் என்ற கருத்தினை

"மண் பரிய வானம் வரப்பினும் மண்ணும் கமா தன் பரங்குன்றம் நினக்கு (பரிபாடல் 8 -130)

என்று பரிபாடல் குறிப்பிடுகின்றது.

மேலும் மதுரைக்காஞ்சியில் பரதவ மகளிர் நெய்தல் நில மண் படுக்கையில் குரவை கூத்தாடியுள்ள இடங்களில் நீர் மணிகளைப் போன்ற மலர்களை முள்ளிச்செடிகள் கொண்டுள்ளது. இதனை,

"மணிப்பூ முண்டகத்து மணல் மலிகானல்

பரதவர் மகளிர் குரவையோடு ஒலிப்ப" (மதுரைக்காஞ்சி 97- 98)

பரதவ பெண்ணின் குரவை கூத்திருக்கு இயற்கைப் பின்னணியாக நீளம் மலர்களும் நிலவு மணலும் அமைந்துள்ளன. நீண்ட மணற்பரப்பு பெண்களின் பொழுதுபோக்கிற்கும் விளையாட்டிற்குமான இடமாகத் திகழ்வதைக் காண முடிகிறது.

மணற் பரப்பிற்கு செல்ல இயலாத பொழுது முற்றத்தும் மணலில் மகிழ்ந்துள்ளனர். வீடுகளில் உள்ள முற்றங்களில் மணல் கொண்டு பரப்பி உள்ளதையும் அதில் வண்டுகளும் சுரும்புகளும் ஆர்ப்பரித்து உள்ளதையும்

"குரும்பைக் காய்ப்படுபு பிறவும் தருமணல்

முற்றத்து அறிஞிமிறு ஆர்ப்ப மென்பூஞ்

செம்மலோடு நன்கலம் சீப்ப" (மதுரைக்காஞ்சி 684-6 85)

என்ற மதுரைக்காஞ்சி வரிகள் சுற்றுகின்றன. திருமணத்தின் போதும் குற்றத்தில் புதுமணல் பரப்பி உள்ளது. புது புனல் வருகை புது மணலை ஆற்றிற்கு தந்துள்ளதையும் இதன் வழி அறிந்து கொள்ள முடிகிறது.

அகப்பாடலில் குறியிடம் சுட்டப்படுகின்ற பொழுது மணல் முக்கிய இடம் பெறுகிறது. ஆடிப்பெருக்கு விழா பௌர்ணமி விழா நிலா சோறு விழா போன்றவை இன்றும் மக்கள் பின்பற்றி வருகின்றனர் மண்ணோடு கலந்த இயற்கை வாழ்வியல் தமிழர்களுக்கே உரியதாக கருதப்படுகின்றது. மக்கள் வாழ்த்திலும் மண் இடம் பெறுகிறது.

"முந்நீர் திரையிடு மணலிலே பலரே

ஊரைச் செல் மலர்தலை உலகம் ஆண்டு கழிந்தோரே" (மதுரைக்காஞ்சி 236 - 237)

என்பதில் மறைந்தவர்கள் எண்ணிக்கை மண்ணோடு உவமைப்படுத்தப் படுவதை காண முடிகிறது. மண் மக்களின் ஒவ்வொரு நிகழ்விலும் நீங்கா இடம் பிடித்துள்ளமையையும் உணர முடிகிறது.

## மழையின்சிறப்பு

சிலப்பதிகாரத்தில் மங்கல வாழ்த்து பாடலில் இயற்கையை போற்றும் தன்மை நிகழ்கிறது அதில் மழையையும் போற்றி பாடுகிறான் கோவலன். இதனை

"மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்

நாம நீர் வேலி உலகிற்கு அவன்

அளிப்போல் மேல நின்று தான் சுரத்தலான்" (சிலப்பதிகாரம்,மங்கலவாழ்த்துப்பாடல்,1:6-8)

சோழ மன்னன் மக்களை எப்படி காப்பாற்றுகிறாரோ அதேபோல் வான் மழையானது மக்களைக் காப்பாற்றுகிறது. தூரத்தில் பெய்யும் மழை அருகில் எட்டிப் பார்க்கும் மழை நெருங்கி வரும், மழை வெள்ளம், மழையின் அறிகுறிகள், விடியற் காலையில் பெய்யும் மழை, அடைமழை என மழை பெய்யும் நுட்பம் குறித்து சுட்டிக்காட்டி உள்ளனர் முன்னோர்கள்.

மனிதன் உயிர் வாழ காற்றும் நீரும் இன்றியமையாததாகும். நீர் வளத்தை மையப்படுத்திய உயிரினங்கள் இவ்வுலகில் வாழ்கின்றன. அதனால் தான் தமிழர்கள் நீரின் இன்றியமையாமையை உணர்ந்து அவற்றை சேமிப்பதற்கான பல வழிமுறைகளை உருவாக்கி வைத்துள்ளனர். இதனை,

"நீரின்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்

வானின்று அமையாது உலகு" (குறள்-20)

என்று நீரின் முக்கியத்துவத்தை வள்ளுவர் எடுத்துரைக்கிறார்.

## புறநானூறு

மழை பெய்யாது இருந்த வானம் பெய்யப் போவதை அறிந்து எறும்புகள் தனது முட்டைகளை எடுத்துக்கொண்டு மேட்டு நிலம் நோக்கி செல்லும் செல்லும் காட்சியினை புறநானூற்றுப பாடலில்,

"பொய்யா எழிலி பெய்இடம் நோக்கி

முட்டை கொண்டு வன்புலம் சேரும்

சிறுநுண் எறும்பின் சில் ஒழுக்கு ஏய்ப்ப" (புறநானூறு 173 :5- 6)

மழைக்காலத்தை முன்கூட்டியே அறிந்து உணவினை சேமிக்கும் பழக்கம் இருந்தமையை இதன் வழி உணர முடிகின்றது.

மழை தோன்றும் திசையையும் சங்க காலத்தில் கண்டறிந்தமையை

"தென் திசை மருங்கின் வெள்ளி ஓடினும்" (புறநானூறு 177: 2)

"இலங்குகதிர் வெள்ளி தென் புலம் படரினும்" (புறநானூறு 35 :7)

வானத்தில் வெள்ளிக் கோள் வடக்கு திசை நோக்கிச் சென்றால் மழை வளம் அதிகமாகும் என்றும், தென்திசை நோக்கிச் சென்றால் மழை வளம் குறையும் என்பதையும் உணர்த்துகிறது. கடையெழு வள்ளல்களில் ஒருவரான பாரிக்கு இணையாக மாரியை குறிப்பிடுவதை ,

"மாரியும் உண்டு ஈண்டு உலகு புரப்பதுவே" (புறநானூறு 107 -4)

பாரி வள்ளலால் இந்த உலக மக்கள் சிறந்த வாழ்கின்றனர் மாறியால் இந்த உலக உயிரினங்கள் சிறந்த வாழ்கிறது என்று கபிலர் குறிப்பிடுகிறார். மழைநீர் உருவாவதை நெடுநல்வாடை

"வையகம் பனிப்ப வலன் ஏர்பு வளைஇ

பொய்யா வானம் புதுப்பெயல் பொலிந்தென" (நெடுநல்வாடை 1-2)

கடல் நீர் வெப்பத்தால் ஆவி ஆகி மேலே சென்று குளிர்வடைந்து நீர் திவலைகள் ஒன்றிணைந்து நீர் துளியாக மாறுகின்றன. நீர் துளிகளின் அளவைப் பொறுத்து அடர்த்தி சிறியதாகவும் குறைவாகவும் மழையாகப் பெய்கிறது. மழையை குறிக்கும் வேறு சொற்கள் மழை, பெயல், கார், மாறி, தூறல், துவலை, சாரல் என்பனவாகும் .மழையின் மேன்மையை உணர்ந்த திருவள்ளுவர் வான் சிறப்பு என்ற ஒரு அதிகாரத்தையே படைத்துள்ளார். மழைத்துளி மண்ணில் விழுந்தால் மட்டுமே ஓரறிவு உடைய பசும்புல் கூட பூமியில் தெரியும் என்பதனை,

"விசும்பின் துளிவீழின் அல்லால் மற்றுஆங்கே

பசும்புல் தலைகாண்பது அரிது" (குறள்16)

மழை நீரை சேமித்து வைப்பதற்கு ஏற்ற நீர் நிலைகளை அமைப்பது மன்னனின் தலையா

கடமை என்பதனை புலவர்,

"நீரின்றி அமையா யாக்கைக்கு எல்லாம்

உண்டி முதற்றே உணவின் பிண்டம்

உணவெனப் படுவது நிலத்தோடு நீரே.

நிலனெளி மருங்கினீர் நிலைபெருகத் தட்டோரம்ம விவட்டாட்டோரே

தள்ளா தோரி வட் அள்ளாதோரே" (புறநானூறு 18:18-21,28-30)

மனித சமுதாயம் நல்ல நிலையில் வாழ நிலத்தையும் நீரையும் பாதுகாப்பது தலையாய கடமையாகும். பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு புலவர் குடபுலவியனார் தந்த அறிவுரை ஆகும். நிலம் எங்கெங்கு பள்ளமாக இருக்கிறதோ அங்கெல்லாம் நீர்நிலைகள் அமையும் படி கரை அமைத்த மன்னர்களே இவ்வுலகில் என்றென்றும் அழியா புகழ் பெற்று விளங்குவர். அவ்வாறு நீர் நிலைகளை உருவாக்கவில்லை எனில் இவ்வுலகம் அவரை பளிப்பர் என்றும் நீர் நிலைகளை உருவாக்கி அதன் மூலம் இவ்வுலகம் உள்ளவரை புகழ்பெற்று வாழ்வர் என்பதையும் குறிப்பிடுகிறார்.

## பத்துப்பாட்டு நூல்கள்

பேகனிடம் கபிலரı; சென்று

“மலைவான் கொள்கென வுயர்பலி தூஉய்

மாரியான்று மழைமேக் குயர் கெனக்

கடவுட் பேணிய குறவர் மாக்கள்

பெயல்கண் மாறிய வுவகையர் வாரற்

புனத்தினை யயிலு நாட” (புறநானூறு 157: 1-5)

எனப் பேகனைப் பார்த்து விளிக்கிறார். நின் மலையில் வாழும் குறவர் மக்கள் கடவுளைப் பணிந்து மழை வேண்டிய பொழுது பெற்றுத் தாம் வெண்டும் உணவினை நுகர்வதைப் போல அருள் பெற்று விளங்குதலை இங்கு உணர்த்துகிறார். மழை மட்டுமே அளவில்லாமல் அளிக்கும் என்பதை கபிலர் உள்ளுறையாக வைத்து உணர்த்துகிறார். மழை பொழிவின் காரணமாக பெரும்புனல் வருவதனை பரத்தை,

“கூந்தல் ஆம்பல் முழுநெறி அடைச்சி

பெரும்புனல் வந்த இடுந்துறை மார்பே” (குறுந்தொகை 80:3-4)

மழை பெய்தால் புதுப்புனல் வெள்ளம் உண்டாகும் அதில் சென்று தலைவனுடன் விளையாடுவேன் என்றுரைக்கிறாள்.

“நெல்லும் நீரும் உயிராய் விளங்கிப் பல்லோர் உடலை வளர்த்து

நில்லா நெடுஞ்சுவர் உயிரையும் நிலைக்க வைத்திடு மென்றும்

நிலமாளும் வேந்தர்க்கும் அதுவே உயிராக விளங்குமென்றும்

நீருக்கும் நெல்லுக்குமுள்ள சிறப்பைச் செப்பினர் சிலபுலவர்”

“பொன்னின் நிறம்வாய்ந்த நெல்விளையும் கழனிகளில்

புனல்பாய்ந்து விதை முளைத்து பயிரின் வேர் நனைத்து

உழவனது வியர்வை யெல்லாம்...... (மு.கருணாநிதி, சங்கத்தமிழ், பக் 40)

என்று கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் மழையின் முக்கியத்துவத்தை சங்கத்தமிழ் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார்.

தொல்காப்பியர் முல்லை நிலத்திற்குரிய பெரும்பொழுதினை சிறப்பான முறையில் சொல்லி இருப்பார். ‘காரும் மாலையும் முல்லை’ நிலப்பொருள் என்று இதற்கு இளங்குமரளார் தரும் விளக்கம்,

“முல்லைப் பொருளாகிய மீட்சிக்கும் தலைவி இருத்தற்கும் உபகாரப்படுவது கார் காலமாகும், வினைவயிற் பிரிந்து மீள்வோன் விரைபரித் தேரூர்ந்து பாசறையினின்று மாலை காலத்த ஊர்வயின் வரூஉங்காலம் ஆவணியும் புரட்டாசியும் ஆகலின் அவை வெப்பமும் தட்பமும் மிகாது இவை நிகர்த்தவாகி ஏவல் செய்து வரும் இளையோர்க்கு நீரும் நிழலும் பயத்தலாகும்”(இளங்குமரன், இலக்கணவரலாறு, பக்.151)

என்றுரைக்கிறார். பொருநராற்றுப்படையில் காவிரியின் வளத்தை பற்றிக் கூறுகையில்,

“அருவி மாமலை நிழத்தவும் மற்று அக்

கருவி வானம் கடல் கோள் மறப்பவும்

பெரு வறனாகிப் பண்பு இல் காலையும்” (பொருநராற்றுப்படை 235-237)

மாமலையில் இருந்து கொட்டும் நீரானது வற்றிப் போகலாம். கடல் நீரை முகந்து சென்று மழை பெய்யும் என்ற செய்தியை எடுத்துரைக்கிறது.

'பகற் பெயல்

மழை வீழ்ந்தன்ன மாத் தாள் கமுகின்" (பெரும்பாணாற்றுப்படை 363)

மழை பொழிவது போல் காணப்படும் பல்வேறு வகையான மரங்கள் பற்றிக் குறிக்கப்படுகிறது.

மழை சிறந்து பெய்வதால் விளைச்சல் பெருகும். விளைச்சல் பெருகுவதால் அறம் சிறக்கும். மழையினால் உலகின் ஒழுக்கம் காக்கப்படும் என்பது திருவள்ளுவரின் கூற்றாகும். இதனை மதுரைக் காஞ்சி,

"மழை ஒழக்கு அறாஅப் பிழையா விளையுல்" (மதுரைக்காங்சி 507)

அனைத்து உலகியல் செயல்பாடுகளும் மழையைப் பொறுத்தே அமைகின்றன. முன்னோர்கள் வழிபாட்டில் மழையும் முக்கியப் பங்கு வகிக்கின்றது. மழையின் உருவாக்கம் பற்றிய தெளிவான சிந்தனையை பெற்றிருந்தனர் என்பதற்கு,

"வான் முகந்த நீர் மழைபொழியவும்

மழைபொழிந்தரூர் கடல் பரப்பவும்" (பட்டினப்பாலை 126-127)

என்ற பாடலடிகள் மழை உருவாகும் விதத்தைக் குறிப்பிடுகிறது. அதனையே மதுரைக் காஞ்சி,

"மழை தொழில் உதவ மாதிரம் கொழுக்க" (மதுரைக்காஞ்சி 10)

வழி உணர்ந்துகொள்ள முடிகிறது. முகில்கள் மழையைப் பொழிவதால் திசைகள் தோறும் ஓரறி உயிர் முதல் ஆறறி உயிர் வரை தலைத்தோங்க முடிகிறது.

"வானம் மின்னு பெட்டாங்கு விளைய விதைப்பு

வைகிய வியன்கண் இரும்புனத்து" (மலைப்படுகடாம் 97-98)

வானம் மின்னி உண்டாகும். மழையானது மக்களின் உயிர்த்தேவையை நிறைவேற்றுவதாக அமைகிறது. இயற்கை வாழ்வின் ஒன்றினைந்து மக்களின் எல்லா செயல்பாடுகளுக்கும் மழை முக்கியக் காரமாகத் திகழ்கின்றது.

## முடிவுரை

மண்ணும் மழையும் மனித வாழ்கையில் இன்றியமையாத இடம்பிடித்துள்ளன. தாங்கள் வாபழும் மண்ணைத் தவிர்த்து வேறு இடம் செல்லாமல் தன் மண் என்னும் எண்ணத்துடன் வாழ்பவர்கள். மழை பொழிந்தால் மண் செழிக்கும் மண் செழித்தால் உலக உயிர்கள் எல்லாம் செழுமை பெறும். மழை இல்லாத காலங்களில் மழை நீரை சேகரிக்க பல நீர்த்தேக்கங்களையும் அதாவது குளம், ஏரி, அணை, ஊருணி என்று பல நீர்த்தேக்கங்களை உருக்கி நீரை சேமித்தனர். இரண்டம் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாகவே இருக்கின்றது. ஆகவே மண்ணையும் மழையையும் காத்தல் சிறப்பானதாகும்.

## References

இரா. இளங்குமரன், (2022) இலக்கண வரலாறு, மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை

க.வெள்ளைவாரணன், (1983) தொல்காப்பியம், புறத்திணையியல் உரைவளம், பதிப்புத்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை

மு.கருணாநிதி, (1987) சங்கத் தமிழ், ராக்ஃபோர்ட் பப்ளிகேசன்ஸ், சென்னை

கு.வெ. பாலசுப்ரமணியன், (2007) அகநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், (பி) லிட், சென்னை

கு.வெ. பாலசுப்ரமணியன், (2007) ஐங்குநுறூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், (பி) லிட், சென்னை

கு.வெ. பாலசுப்ரமணியன், (2007) கலித்தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், (பி) லிட், சென்னை

கு.வெ. பாலசுப்ரமணியன், (2007) குறுந்தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், (பி) லிட், சென்னை

கு.வெ. பாலசுப்ரமணியன், (2007) பத்துப்பாட்டு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், (பி) லிட், சென்னை

கு.வெ. பாலசுப்ரமணியன், (2007) புறநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், (பி) லிட், சென்னை

ச.சேதுராமன், (2021) செவ்விலக்கியப் புதுமைகள், பாவை பப்ளிகேசன்ஸ், சென்னை

ஞா.மாணிக்க வாசகன், (2016) பத்துப்பாட்டு மூலமும் விளக்கமும், உமா பதிப்பகம், சென்னை

தி.மகாலட்சுமி, (2015) குறுந்தொகையில் இயற்கை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License